# புதுச்சேரி அரசு
# இந்து சமய நிறுவனங்கள் துறை
# ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம்
# திருநள்ளாறு.

நெ. நிஅ(கோ)/பி1/ஸ்ரீதசுதே/திரு/2025-26/ 795　　　　தேதி: 30.12.2025

## பந்தல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சனிப்பெயர்ச்சி விழாவிற்காக பந்தல் கொட்டகை, பேரிகாடு, சார்பு மற்றும் கண்காணிப்பு கோபுரம் போன்றவைகள் அமைக்க முன் அனுபவமுள்ள தகுந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து நிர்வாக அதிகாரி அவர்களால் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி படிவத்தை **www.thirunallarutemple.org** என்ற இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும்.

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவிறக்கம் செய்துகொள்ள கடைசி தேதி மற்றும் நேரம் | : 13.01.2026 மாலை 4.00 மணி |
| ஒப்பந்தப்புள்ளி படிவங்களை அலுவலகத்தில் சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம் | : 13.01.2026 மாலை 3.30 மணி |
| ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பிரிக்கப்படும் தேதி மற்றும் நேரம் | : 13.01.2026 மாலை 4.00 மணி |
| டேவணித் தொகை | : ரூ.30,000/- |

கீழ்கண்ட வேலைகளுக்கு கீழே குறிபிட்டுள்ள கால அளவிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | சனிபெயர்ச்சி விழா மட்டும் | - 26.02.2026 முதல் 16.03.2026 வரை |
| 2. | சனிப்பெயர்ச்சி விழா முதல் சனிப்பெயர்ச்சி தொடர்ச்சி வரை | - 26.02.2026 முதல் 05.04.2026 வரை |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்:

1. ஒப்பந்தப்புள்ளி படிவத்தை **www.thirunallarutemple.org** என்ற இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவத்தொகையாக ரூ. 500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) மற்றும் 5% சரக்கு மற்றும் சேவை வரியுடன் சேர்த்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் நிர்வாக அதிகாரி, ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு என்ற பெயரில் பெறப்பட்ட வரைவோலை ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவத்தை சமர்ப்பிக்கும் போது டேவணித் தொகையாக ரூ. 30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) தேசிய மயமாக்கப்பட்ட வெங்கியில் நிர்வ..க அதிகாரி, ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு என்ற பெயரில் பெறப்பட்ட வரைவோலையாக இணைக்கப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவத்தொகை மற்றும் டேவணித்தொகை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும். ஒப்பந்தகாலம் நிறைவடைந்த உடன் டேவணித்தொகை மட்டும் ஒப்பந்ததாரருக்கு திரும்ப அளிக்கப்படும்.

3. மேற்படி வேலைகளுக்கு தேவஸ்தானத்திலிருந்து எந்தவிதமான பொருட்களும் வழங்கப்படமாட்டாது. ஒப்பந்ததாரர் தனது சொந்த பொறுப்பிலேயே தேவையான பொருட்களை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
4. மேற்படி வேலையினால் ஏற்படும் சேதாரங்களுக்கும், பின் விளைவுகளுக்கும் தேவஸ்தானம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது.
5. சனிப்பெயர்ச்சி விழாவிற்காக செய்யப்படும் வேலைகள் மட்டுமல்லாமல் அதிகாரிகளால் பணிக்கப்படும் அவசர வேலைகளையும் உடனுக்குடன் செய்து தருவதற்கும் எந்த நேரத்திலும் தயாராக இருக்க வேண்டும்.
6. சனிப்பெயர்ச்சிக்காக 06.03.2026 அதிகாலை 4.00 மணி முதல் 06.03.2026 இரவு 10.00 மணி வரை தொடர்ச்சியாக அவசர பராமரிப்பு வேலைகள் செய்வதற்கு ஒப்பந்ததாரர் தனது செலவில் குறைந்தது பத்து நபர்களை பணியில் வைத்திருக்க வேண்டும்.
7. மேற்கண்ட வேலைகள் அனைத்தும் தேவஸ்தான கட்டுமான பணிக்குழுவினரால் மேற்பார்வையிடப்பட்டு சான்று அளித்தப் பின்னரே ஒப்பந்தத்தொகை பட்டுவாடா செய்யப்படும்.
8. மேற்கண்ட வேலைகளை மேலே குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் முடித்துக்கொடுக்காத பட்சத்தில் நாள் ஒன்றுக்கு ரூ. 2,000/- வீதம் (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) ஒப்பந்தத்தொகையில் பிடித்தம் செய்யப்படும்.
9. மேற்கண்ட வேலைகள் அனைத்தையும் பணி ஆணை வழங்கிய தினத்திலிருந்து 25.02.2026 அன்று மாலைக்குள் முடித்துக்கொடுக்க வேண்டும்.
10. சனிப்பெயர்ச்சி விழா காலத்திற்கு மட்டும் இருக்கும் பந்தல்கள், பேரிகார்டுகள் போன்றவைகள் சனிப்பெயர்ச்சி விழாவிற்கு மட்டும் கோரியுள்ள தொகையை கணக்கிட்டு பணம் பட்டுவாடா செய்யப்படும். சனிப்பெயர்ச்சி விழா தொடர்ச்சிக்கும் இருக்கும் பந்தல்கள் காலக்கெடு முடிந்தவுடன் சனிப்பெயர்ச்சி விழா காலத்திற்கு கொடுக்கப்பட்ட தொகையினை கழித்து மீதமுள்ள பணம் பட்டுவாடா செய்யப்படும்.
11. வருமானவரி 1% (தனி நபர் எனில்) அல்லது 2% (நிறுவனம் எனில்) மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி 2% பில் தொகையில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.
12. மேற்படி டெண்டரை ஏற்கவோ, எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்கவோ ஆலய நிர்வாக அதிகாரி அவர்களுக்கு முழு உரிமையுண்டு. நிர்வாக அதிகாரியின் முடிவே இறுதியானது.

(R. சுப்ரமணியன்)
நிர்வாக அதிகாரி (கோயில்கள்)

தொலைபேசி : 04368-236504

அலுவலக தகவல் பலகை:

1. மாவட்ட ஆட்சியர், காரைக்கால் மற்றும் தனி அதிகாரி, ஸ்ரீதசுதே, திருநள்ளாறு.
2. கண்காணிப்புப்பொறியாளர் (வட்டம் - III), பொதுப்பணித்துறை, காரைக்கால்.
3. செயற்பொறியாளர், கட்டிடங்கள் & சாலைப் பிரிவு, பொபது, காரைக்கால்.
4. செயற்பொறியாளர், நீர்ப்பாசனம் & பொது சுகாதாரப் பிரிவு, பொபது, காரைக்கால்.
5. செயற்பொறியாளர், திருநள்ளாறு கொயில் நகர மேம்பாட்டு திட்டப் பிரிவு, பொபது, காரைக்கால்.
6. உதவிப்பொறியாளர் (வட்டம் - III), பொதுப்பணித்துறை, காரைக்கால்.
7. சிறப்பு அலுவல் அதிகாரி, ஸ்ரீதசுதே, திருநள்ளாறு.
8. மேலாளர் (கணக்கு), ஸ்ரீதசுதே, திருநள்ளாறு.
9. அருள்மிகு பத்ரகாளியம்மன் தேவஸ்தானம், அம்பகரத்தூர்.
10. ஆலய தகவல் பலகை.
11. தேவஸ்தான வலைதளம்
12. நகல் பிரதி.